டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 15.02.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 196 - Madurai | Online Edition

# செயற்கை உயிரியலில் ஆராய்ச்சி மற்றும் ஒழுங்குமுறை திட்டம் உருவாக்கப்படுகிறது

புது தில்லி, பிப்.14

பயோ இ3 கொள்கையின் (பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் வேலைவாய்ப்புக்கான உயிரி தொழில்நுட்பம்) ஒரு பகுதியாக, உயிரி அடிப்படையிலான தயாரிப்புகளின் உயிரி உற்பத்திக்காக செயற்கை உயிரியல் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.

பயோ இ3 கொள்கையின் கீழ் செயற்கை உயிரியல் கருவிகள் போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உயிரி அடிப்படையிலான தயாரிப்புகளை உற்பத்தி செய்வதை உள்ளடக்கிய ஆராய்ச்சி, தொழில்துறை பயன்பாடு மற்றும் நிலையான பொருளாதார இலக்குகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தக் கொள்கை இந்தியாவின் பசுமை வளர்ச்சி (2023-24 மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது) என்ற தொலைநோக்குப் பார்வை உடனும், நிலைத்தன்மையை நோக்கிய கூட்டு அணுகுமுறையை முன் வைக்கும் 'சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறை (லைஃப்)' என்ற பிரதமரின் அறைகூவலுடனும் ஒத்துப்போகிறது. இந்தக் கொள்கையின் கீழ் உள்ள பல்வேறு முயற்சிகள், நாட்டின் 'நிகர-பூஜ்ஜிய' கார்பன் பொருளாதாரம் என்ற பிரதமரின் தொலை நோக்குப் பார்வையுடனும் ஒத்துப்போகின்றன. மேலும், உயிரி உற்பத்தி மையங்கள், உயிரி ஃபவுண்டரிகள், உயிரி-செயற்கை நுண்குணறிவு மையங்களை அமைப்பது, இந்தியாவில் உற்பத்தி செய்தல் திட்டத்தை வலுப்படுத்துவதையும், மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி திறனுக்கு உயிரி தொழில்நுட்பத் துறையின் பங்களிப்பை இயக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனால் '2047-இல் வளர்ச்சியடைந்த பாரதம்' இலக்குகளும் ஒத்துப்போகின்றன.

இதனை மத்திய அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் மற்றும் புவி அறிவியல் துறை இணையமைச்சர் (தனிப் பொறுப்பு), டாக்டர் ஜிதேந்திர சிங் மாநிலங்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்தார்.

# சூரியகாந்தி விதை உற்பத்தி வயல் விழா

விருதுநகர், பிப்.14

இந்திய எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிறுவனம், ஹைதராபாத், விதை மையம், கோயம்புத்தூர் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம், அருப்புக்கோட்டை இணைந்து சிதம்பராபுரம் கிராமத்தில் சூரியகாந்தியில் வயல் விழா ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விழாவில் முனைவர் ராம சுப்ரமணியன், திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், தலைமை தாங்கினார். தலைமை உரையில் எண்ணெய்வித்து பயிர்களின் முக்கியத்துவம், எண்ணெய் வித்து பயிர்களில் இயந்திரங்களின் பயன்பாடு மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றி எடுத்து கூறினார்.



முனைவர் ஷீபா, பேராசிரியர், சூரியகாந்தி பயிர்களில் உயர் விளைச்சல் தரும் இரகங்களை பற்றி எடுத்துரைத்தார்.

முனைவர் வேணுதேவன், உதவி பேராசிரியர், மண்டல ஆராய்ச்சி நிலையம், விதை நேர்த்தி, விதை உற்பத்தி மற்றும் சூரியகாந்தியில் மகசூலை அதிகரிக்கும் தொழில்நுட்பங்களை பற்றி விளக்கமளித்தார். முனைவர் கிருஷ்ண சுரேந்தர், உதவி பேராசிரியர், மண்டல ஆராய்ச்சி நிலையம், எண்ணெய் வித்து பயிர்களில் கடைபிடிக்க வேண்டிய உர மேலாண்மை மற்றும் சத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் தொழில்நுட்பங்களை பற்றி எடுத்துகூறினார். இவ்விழாவில் எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி செய்யும் 50 பட்டியலின விவசாயிகள் கலந்து கொண்டு சூரியகாந்தி சாகுபடி குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகளை பெற்று பயனடைந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# வேளாண்மைத் துறை வல்லுநர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துரையாடல்

கன்னியாகுமரி, பிப்.14

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டம் மூலம் அகஸ்தீஸ்வரம் வட்டாரம் வேளாண்மை உதவி இயக்குனர் சுனில் தத், தலைமையில் மாவட்ட அளவில் வேளாண் அறிவியல் மையம் மற்றும் வேளாண் பல்கலைக் கழகத்தின் மூலம் நியமிக்கப்பட்ட வல்லுநர்களுடன் விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி அழகப்பபுரம் கிராமத்தில் நடைபெற்றது.



வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரின்ஸ் ஜெயசிங் வரவேற்புரை வழங்கி அட்மா திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் இணை பேராசிரியர் ராஜ் பிரவின், தென்னையில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

தென்னையை தாக்கும் சுருள் வெள்ளை ஈ மேலாண்மை, காண்டாமிருக வண்டு மேலாண்மை, வேர் வாடல் அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாட்டு முறை குறித்து தெரிவித்தார்.

தென்னையில் தாக்கும் பூச்சி நோய் அதன் அறிகுறிகளின் சந்தேகங்களையும் விவசாயிகள் கேட்டு அறிந்து கொண்டனர் இந்நிகழ்சியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் ஜெயகுமாரி, சிந்துஜா மற்றும் வட்டார விவசாய குழு உறுப்பினர்கள் செபஸ்டின் பாஸ்கர் உட்பட அழகப்பபுரம் கிராம மக்கள் 25 பேர் கலந்து கொண்டனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டி

திருச்சி, பிப்.14

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டாரம், அசூர் கிராமத்தில் நடைபெற்ற மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டிக்கு நடுவராக தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் கோ.வித்யா கலந்துக் கொண்டார்.

தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறை சார்பில் நெல் சாகுபடியில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை கடைப்பிடித்து மாநில அளவில் அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிகளுக்கு 'நாராயணசாமி நாயுடு நெல் (எஸ்.ஆர்.ஐ) உற்பத்தி திறன் விருது' அறிவிக்கப்பட்டிருந்தது.

மாநில அளவில் முதலிடம் பெறும் விவசாயிகளுக்கு விருது, முதல் பரிசு ரூ.5 இலட்சம், சிறப்புப் பரிசு மற்றும் ரூ.7ஆயிரம் மதிப்புள்ள பதக்கம் வழுங்கப்படும். விவசாயிகள் குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலம் சொந்தமாகவோ அல்லது குத்தகையாகவோ திருந்திய நெல் சாகுபடி செய்பவராகவும் இருக்க வேண்டும்.

மேலும், தொடர்ந்து மூன்று ஆண்டுகள் திருந்திய நெல் சாகுபடி செய்து வரும் முன்னோடு விவசாயிகளாக இருக்க வேண்டும், வயலில் குறைந்தபட்சம் 50 சென்ட் பரப்பளவில் பயிர் அறுவடை பரிசோதனை செய்யப்படும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டாரத்தில் அசூர் கிராம விவசாயி பழனிமாணிக்கம், த/பெ.வரதராஜன் என்பவரது வயலில் 12.02.26 அன்று நடைபெற்ற பயிர் அறுவடை பரிசோதனைக்கு நடுவராக தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் கோ.வித்யா, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) இரா.ஜெயராணி, உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் சே.ராஜ சேகரன், திருவெறும்பூர், வேளாண்மை உதவி இயக்குநர், சுகன்யாதேவி, வேளாண்மை அலுவலர் திலகா மற்றும் விவசாய பிரதிநிதி சுப்பையா ஆகியோர் கலந்துக் கொண்டார்கள் என திருச்சிராப்பள்ளி, வேளாண்மை இணை இயக்குநர், பூ.வசந்தா தகவல் தெரிவித்தார்கள்.

அன்புடையீர்,

நமது ‘அக்ரி டாக்டர்’ மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது ‘அக்ரி டாக்டர்’ மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# காளான் வளர்ப்பு புதிய அமைப்பு துவக்கம்

மதுரை, பிப்.14




காளான் வளர்ப்பு மற்றும் வேளாண்மை சார்ந்த பணிகளுக்கென தொண்டு அமைப்பு ஒன்று தொடங்கத் திட்டமிடப் பட்டுள்ளது. மதுரை நகருக்கு அருகே சில கிலோமீட்டர் தொலைவில் உள்ள அச்சம்பத்து என்ற ஊராட்சிப் பகுதியில் இந்த அமைப்பைத் தொடங்கத் திட்டமிட்டு உள்ளனர். இதற்கான முதல் கட்ட பூர்வாங்கப் பணிகளை இந்த அமைப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த அமைப்புக்கு ஓமை (OMAI) என்று பெயரிட்டுள்ளனர். ஓமை என்பதற்கு தமிழில் வறட்சியான நிலத்தில் வளரும் ஒரு பசுமையான மரம் என்று பொருள்.

இந்த அமைப்பைத் தொடங்குவதற்காக நடத்தப்பட்ட ஆலோ சனைக் கூட்டத்தில், ஜனேஜா காளான் நிறுவனத்தின் ஜான், எஸ்விகே ஆர்கானிக் பண்ணையைச் சேர்ந்த லோகநாதன் சேவியர், சோலை திட்ட ஒருங்கிணைப்பாளர் கோவிந்தராஜன், பிகேஎஸ் அக்ரோ புராடக்ட்ஸ் நிறுவனத்தின் கலைச்செல்வி, டாக்டர் நரசிம்மன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த அமைப்பின் நோக்கம் என்னவென்றால், தமிழ்நாட்டில் காளான் வளர்ப்பு மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள அனை வரையும் உறுப்பினர்களாகச் சேர்ப்பது, முதலில் தன்னார்வமாக காளான் வளர்ப்புத் தொழிலில் நீண்ட காலமாகச் செயல்பட்டு வரும் நபர்களில் இருபது பேரை இயக்குநர்களாக நியமிப்பது, வரும் ஏப்ரல் அல்லது மே மாத இறுதிக்குள் இந்த அமைப்பின் துவக்க நிகழ்ச்சியை நடத்துவது.

இந்த நிகழ்ச்சியில், காளான் உற்பத்தியாளர்கள் அனை வரையும் பங்கேற்கச் செய்வது என அமைப்பின் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

தொடர்புக்கு : லோகநாதன், +91 90473 98882.

# பாசன முறைகள்

# [Methods of Irrigation] - ஒரு பார்வை

விவசாயம் மனித வாழ்க்கையின் அடிப்படை. விவசாயத்தின் வெற்றிக்கு நீர் மிக முக்கியமான வளமாகும். மழை மட்டும் நம்பி விவசாயம் செய்வது எல்லா காலங்களிலும் சாத்தியமில்லை. அதனால் பயிர்களுக்கு தேவையான அளவு நீரை செயற்கை யாக வழங்கும் முறையே பாசனம் (Irrigation) எனப்படுகிறது.




சரியான பாசன முறைகள் பயன் படுத்தப்பட்டால் பயிரின் வளர்ச்சி, உற்பத்தி மற்றும் விவசாயியின் வருமானம் அதிகரிக்கும்.

**பாசனத்தின் முக்கியத்துவம் (Importance of Irrigation)**



பயிர்களுக்கு தேவையான நீரை சரியான நேரத்தில் வழங்க உதவுகிறது. மழை குறைவான பகுதிகளில் விவசாயத்தை சாத்திய மாக்குகிறது. அதிக விளைச்சலை பெற உதவுகிறது. வறட்சி பாதிப்புகளை குறைக்கிறது. விவசாயத்தின் நிலைத் தன்மையை அதிகரிக்கிறது.

**பாசன முறைகளின் வகைகள் (Types of Irrigation)**

பாசன முறைகள் பொதுவாக நான்கு முக்கிய வகைகளாக பிரிக்கப்படுகின்றன:

- மேற்பரப்பு பாசனம்
- தெளிப்பு பாசனம்
- துளி பாசனம்
- அடிநில பாசனம்

**1.மேற்பரப்பு பாசனம்**

இது மிகவும் பழமையான பாசன முறையாகும். இந்த முறை யில் நீர் கால்வாய்கள், வாய்க்கால்கள் அல்லது ஆறுகள் மூலம் வயலின் மேற்பரப்பில் ஓடவிடப்படுகிறது.

**நன்மைகள்**

- செலவு குறைவு.
- சிறிய விவசாயிகளுக்கு ஏற்றது.
- தொழில்நுட்ப அறிவு குறைவாக போதுமானது.

**குறைபாடுகள்**

- நீர் அதிகமாக வீணாகிறது.
- மண் அரிப்பு ஏற்படுகிறது.
- பயிர்களுக்கு சமமான நீர் கிடைப்பதில்லை.

**2.தெளிப்பு பாசனம் (Sprinkler Irrigation)**

இந்த முறையில் குழாய்கள் மற்றும் நாசல்கள் மூலம் நீர் மழை போல தெளிக்கப்படுகிறது. இது நவீன பாசன முறைகளில் ஒன்றாகும்.

**நன்மைகள்**

- சமமான நீர் விநியோகப்படுகிறது.
- நீர் சேமிக்க பயன்படுகிறது.
- மலைப்பாங்கான நிலங்களிலும் பயன்படுத்தலாம்.

**குறைபாடுகள்**

● ஆரம்ப செலவு அதிகம். ● காற்று வீசும் போது நீர் வீணாகும்.
● மின்சாரம் தேவைப்படுகிறது.

### 3.துளி பாசனம் (Drip Irrigation)

இந்த முறையில் குழாய்கள் மூலம் செடியின் வேர் பகுதியில் துளிதுளியாக நீர் வழங்கப்படுகிறது. இது மிகச் சிறந்த நீர் சேமிப்பு முறையாகும்.

**நன்மைகள்**

● நீர் வீணாகிறது. ● பயிர் விளைச்சல் அதிகரிக்கிறது.
● உரங்களை நேரடியாக வேர் பகுதிக்கு கொடுக்கிறது.

**குறைபாடுகள்**

● அமைப்பு செலவு அதிகமாகும். ● பராமரிப்பு தேவைப்படுகிறது.
● குழாய்கள் அடைபடும் வாய்ப்புள்ளது.

### 4.அடிநில பாசனம் (Subsurfarce Irrigation)

இந்த முறையில் மண்ணின் அடியில் குழாய்கள் அமைக்கப் பட்டு நீர் வழங்கப்படுகிறது. நீர் நேரடியாக வேர் பகுதிக்கு சென்று சேரும்.

**நன்மைகள்**

● ஆவியாகும் நீர் இழப்பு குறைவு.
● களை வளர்ச்சி குறைக்கிறது. ● நீர் சேமிப்பு அதிகமாகிறது.

**குறைபாடுகள்**

● பராமரிப்பு செலவு அதிகம்.
● பழுது ஏற்பட்டால் கண்டறிதல் கடினம்.

### நவீன விவசாயத்தில் பாசனத்தின் பங்கு

இன்றைய காலத்தில் நீர் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது. அதனால் துளி பாசனம் மற்றும் தெளிப்பு பாசனம் போன்ற நவீன முறைகள் மிகவும் அவசியமாகின்றன. இவை நீர் சேமிப்பையும் அதிக விளைச்சலையும் உறுதி செய்கின்றன. பாசனம் விவசா யத்தின் முதுகெலும்பாகும். சரியான பாசன முறையை சரியான பயிருக்கு பயன்படுத்தினால் நீர் சேமிக்கிறது, செலவு குறைக்கிறது மற்றும் அதிக விளைச்சல் பெற முடியும். நிலையான விவசாய வளர்ச்சிக்கு நவீன பாசன முறைகள் அவசியம்.

**மேலும் விபரங்களுக்கு பா.கீர்த்திகா, இளங்கலை வேளாண் மாணவி, முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், முனைவர் இர.மகாலட்சுமி, குழு மேற்பார்வை**

யாளர், ம.பானுப்பிரியா, குழு மேற்பார்வையாளர், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna8789@gmail.com, தொலைபேசி எண் : 99446 41459 ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

# இ-நாம் (e-NAM) குறித்த விளக்க நிகழ்வில் வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.14

பி.ஜி.பி வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள் மணப்பாள்ளி கிராமத்தில் விவசாயிகளுக்காக இ-நாம் (National Agriculture Market) குறித்த விளக்க நிகழ்ச்சியை நடத்தினர். இந்த விளக்க நிகழ்ச்சியில், இ-நாம் என்பது 2016 ஆம் ஆண்டு இந்திய அரசால் தொடங்கப்பட்ட ஆன்லைன் வேளாண் சந்தை தளம் என்றும், விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் வாங்குபவர்களை ஒரே தளத்தில் இணைத்து, வெளிப்படையான மற்றும் போட்டி அடிப்படையிலான ஆன்லைன் ஏலத்தின் மூலம் விவசாயிகள் சிறந்த விலை பெற உதவுவதாகவும் விளக்கப்பட்டது.

மேலும், விவசாயிகளுக்கு சிறந்த சந்தை அணுகல், விலை வேறுபாடு குறைப்பு, நியாயமான வர்த்தகம் மற்றும் வெளிப்படைத்தன்மை போன்ற இ-நாம் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

இந்த விளக்க நிகழ்ச்சியில் மாணவிகள் இ-நாம் செயல்முறை குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக விளக்கினார்கள். போஸ்டர்கள் மற்றும் விளக்கப்படங்கள் மூலம் செய்முறை விளக்கம் வழங்கப்பட்டு, மொபைல் ஆப் மூலம் சந்தை விலைகளை எவ்வாறு சரிபார்ப்பது என்பதும் எடுத்துக் காட்டப்பட்டது.

விவசாயிகள் எழுப்பிய சந்தேகங்களுக்கு உரிய விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்** நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தமிழகத்தில் நிலத்தடி நீர் மட்டம் - கவலைக்கிடம்? அதை சரி செய்வது எப்படி?



கடந்த சில ஆண்டுகளாக தமிழகத்தின் பல மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் பின்தங்கிய உள்ளதாக மத்திய நிலத்தடி நீர் வாரியமும், தமிழக நீர் வளத்துறையும் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இந்த பதிவில் நிலத்தடி நீர், நிலத்தடி நீர்மட்டம் குறைய காரணங்கள் என்ன? அதை மேம்படுத்துவது எப்படி என்பதை பார்ப்போம்.

**நிலத்தடி நீர் என்றால் என்ன?**

நிலத்தடி நீர் என்பது பூமியின் மேற்பரப்பிற்கு அடியில் மண்துகள்கள் மற்றும் பாறை பிளவுகளில் சேமிக்கப்பட்டுள்ள நன்னீராகும். இது உலகில் எளிதாக கிடைக்கூடிய நன்னீரில் 30% ஆகும். மழை நீர் பூமிக்குள் கசிந்து நிலத்தடி நீர் படுக்கையில் (AGUIFERS) சேமிக்கப்படுகிறது. இது விவசாயம் மற்றும் குடிநீருக்கான முக்கிய ஆதாரமாக உள்ளது. ஆனால் அதிகபடியான பயன்பாட்டால் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழகத்தில் நீர்மட்டம் மாவட்ட அளவில் எந்த நிலையில் உள்ளது தெரியுமா?**

தமிழகத்தின் பல மாவட்டங்களில் நிலத்தடி நீர் குறைந்து உள்ளது. தமிழகத்தில் 9 மாவட்டங்களில், சேலம், திருப்பத்தூர், வேலூர், சென்னை, திண்டுக்கல், மயிலாடுதுறை, நாமக்கல், கரூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்கள் – எச்சரிக்கை சிவப்பு பட்டியலில் (RED ZONE) உள்ளதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இந்த மாவட்டங்களில் அதாவது மழை மூலமாக பூமிக்குள் செல்லும் நீரை விட எடுக்கப்படும் நீரின் அளவு மிக அதிகமாகும்.

**நிலத்தடி மறு ஊட்டம்?**

2025 ஆம் ஆண்டிற்கான கணக்கீட்டின்படி தமிழகத்தில் நிலத்தடி நீர் மட்டம் 22.61 யனீனி ஆக உள்ளது. இதில் கணிசமான அளவு ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி, கோவை ஆகிய மாவட்டங்களில் 90 முதல் 100% நிலத்தடி நீர் உறிஞ்சி மிக நெருக்கடியான நிலையில் உள்ளன. தர்மபுரி, மதுரை, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் 70-90% நீரை பயன்படுத்தி பாதி நெருக்கடியில் உள்ளன.

**நிலத்தடி நீர் சுரண்டலுக்கு என்ன காரணம்?**

நிலத்தடி நீர் சுரண்டலை தடுக்க முறையான சட்ட கட்டமைப்பு இல்லாததே இந்த நிலைக்கு காரணம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். நிலத்தடி நீர் உறிஞ்சிட படுவதால் பூமியின் அச்சு சாய்வாக உள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளதாக தகவல்.

**நிலத்தடி நீர் மட்டம் குறைவாக உள்ளதற்கு என்ன காரணம்?**

1) மக்கள் தொகை பெருக்கம்

2) நகரமயமாக்கல்

3) முறையற்ற நீர் பயன்பாடு

4) அதிகப்படியான ஆழ்துளை கிணறுகள் (BORE WELL)

5) நீர் நிலைகளை தூர்வாராமை.

6) காலநிலை மாற்றத்தால் ஏற்படும் வறட்சி.

7) காடுகள் அழிப்பு.

**நிலத்தடி நீர் மட்டம் அதிகரிக்க என்ன செய்ய வேண்டும்?**

1) மழைநீர் சேகரிப்பு நிலத்தடி நீரை (RECHARGE) செய்தல்.

2) நீரின் வளத்தை பொருத்து பயிர் சாகுபடி செய்தல்

3) நீரின் பயன்பாட்டை குறைக்க சொட்டுநீர் பாசனம் தெளிப்பு நீர்ப்பாசன வசதியை அதிகரித்தல்

4) மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை உருவாக்குதல்.

5) RED ZONE பகுதியில் ஆழ்துளை கிணறுகள் அமைப்பை தடை செய்ய வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# சமையலறைத் தோட்டப் பயிற்சி

# வேளாண் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கம்




மதுரை, பிப்,14

காரைக்குடி, சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் இறுதி ஆண்டு பயிலும் மாணவிகள், கிராமப்புற விவசாயப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்தில் தங்கிப் பணி யாற்றி வருகின்றனர். இதன் ஒரு நிகழ்வாக, M.மலம்பட்டி கிராமத்தில் பொதுமக்களுக்குச் சமையலறைத் தோட்டம் அமைப்பதற்கான பயிற்சி மற்றும் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

**பயிற்சியின் நோக்கம் :** விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தங்கள் அன்றாடத் தேவைக்கான காய்கறிகளை நஞ்சில்லாத முறையில், குறைந்த செலவில் தாங்களே உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதே இப்பயிற்சியின் முக்கிய நோக்கமாகும்.

**செயல்முறை விளக்கம் :** மலம்பட்டி கிராமத்தில் உள்ள ஒரு வீட்டின் பின்புறத்தில் உள்ள காலி இடத்தைத் தேர்ந்தெடுத்த மாணவிகள், அதனைச் சாகுபடிக்கு ஏற்றவாறு தயார் செய்தனர். மண்ணைப் பண்படுத்தி, இயற்கை உரங்களைப் பயன்படுத்திப் பாத்திகள் அமைக்கும் முறையைச் செய்து காட்டினர்.

தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய் மற்றும் கீரை வகைகளைச் சரியான இடைவெளியில் நடவு செய்யும் முறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

**பராமரிப்பு :** குறைந்த நீரைப் பயன்படுத்தி அதிக மகசூல் பெறுவது எப்படி?

**இயற்கை உரம் :** வீட்டுக் கழிவுகளைக் கொண்டே இயற்கை உரம் தயாரிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**பங்கேற்பாளர்கள் :** இந்த நிகழ்வில் கல்லூரி மாணவிகள் செ.அஸ்மிதா, ரா.சப்னா, வீ.அபித்ரா, பா.விஜயலெட்சுமி, சி.கிருத்திகா, செ.கிருஷ்ணவேனி மற்றும் க.கயல் தீட்சித் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்குப் பயிற்சி களையும் ஆலோசனைகளையும் வழங்கினர்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## பாரம்பரிய சிறுதானிய ரகங்களின் மதிப்பூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் பயிற்சி

கோயம்புத்தூர், பிப்.14

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பயிர் மேலாண்மை இயக்ககம், வேளாண் காலநிலை ஆராய்ச்சி நிலையம், கோயம் புத்தூர், 12.02.26 அன்று பாரம்பரிய சிறுதானிய வகைகளின்




மதிப்பூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் என்ற தலைப்பில் விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோருக்கான பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இந்த பயிற்சி, வளர்ந்து வரும் நாடுகளில் எதிர் பார்க்கப்படும் காலநிலை மாற்றச் சூழ்நிலைகளின் கீழ் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்த காலநிலை மாற்றத்திற்குத் தாங்கும் திறன் கொண்டபயிர்களைப் பயன்படுத்துதல் என்ற திட்டத்தின் கீழ், கிராண்ட் சேலன்ஜ்ஸ் கனடா நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தப் பட்டது. உதவி பேராசிரியர் முனைவர் எஸ்.கோகிலவாணி, (வேளாண் வானிலையியல்) வரவேற்புரை வழங்கி, திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் பாரம்பரிய சிறுதானியங்களின் அவசியத்தை விளக்கினார்.

இந்த பயிற்சியின் முக்கிய நோக்கம், ஊட்டச்சத்துமிக்க பாரம்பரிய சிறுதானியங்களைப் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மதிப்பூட்டப்பட்ட தயாரிப்புகளின் பொதியிடல் முறை களை அறிமுகப்படுத்துதல் மற்றும் வாழ்க்கை முறை நோய் களுக்கு எதிரான பாதுகாப்பை வலுப்படுத்துதல் ஆகும். பயிற்சியை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர் என்.வெங்கடேசபழனிச்சாமி தலைமை வகித்து தொடங்கி வைத்தார். அவர் பாரம்பரிய சிறுதானிய வகைகளின் முக்கியத் துவம் மற்றும் சந்தைப்படுத்தல் வாய்ப்புகள் குறித்து விளக்கினார்.

அறுவடைப் பின்சார் தொழில்நுட்ப மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ்.கார்த்திகேயன், உணவுப் பொருட்களின் நீடித்த காலம் (Shelf life) மற்றும் மதிப்பூட்டப்பட்ட தயாரிப்புகளில் நுகர்வோர் விருப்பத்தை கருத்தில் கொள்ளும் அவசியம் குறித்து விளக்கமளித்தார். வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் என்.கே.சத்தியமூர்த்தி, காலநிலை மாற்றம் மற்றும் அதன் வேளாண் உற்பத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்து சிறப்புரை வழங்கினார். ராமசாமி சின்னம்மாள் அறக்கட்டளை செயலாளர் முனைவர் சரஸ்வதி ஈஸ்வரன், தொழில்முனைவோர் மேம்பாட்டில் அரசு அல்லாத அமைப்புகளின் பங்கு மற்றும் வணிக முன்னேற் றத்திற்கான வழிமுறைகள் குறித்து கருத்துகளை பகிர்ந்து கொண்டார். உணவு செயல்முறை பொறியியல் துறையின் பேராசிரியர் முனைவர் வி.திருப்பதி, பாதுகாப்பு பொதியிடல் முறைகள் தயாரிப்புகளின் தரம், பாதுகாப்பு மற்றும் விற்பனை ஈர்ப்பை மேம்படுத்தும் விதம் குறித்து விளக்கமளித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாநிலம் முழுவதும் இருந்து தொடக்க நிறுவனங்கள் (Start-ups) மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# இயற்கை வேளாண்மையில் உயிர்மச் சான்று பெறும் நடைமுறைகள்

உயிர்ம வேளாண்மையில் செயற்கை இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் மரபணு மாற்றம் செய்யப் பட்ட விதைகளை தவிர்த்து தனிமைப்படுத்தப்பட்ட பண்ணை களிலிருந்து இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை மட்டுமே பயன்படுத்தி இயற்கை வழி மேலாண்மை முறையில் சாகுபடி செய்யும் முறையே அங்கக வேளாண்மை எனப்படுகிறது.

உயிர்ம வழி மேலாண்மை முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகள் தனி நபராகவோ அல்லது குழுவாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும் உயிர்ம விளை பொருட்களை பதப்படுத்துவோர் வணிகம் மற்றும் ஏற்றுமதி செய்வோரும் பதிவு செய்யலாம். உயிர்மச் சான்று பெற விவசாயிகள் அதற்கான பூர்த்தி செய்யப் பட்ட விண்ணப்பம், பண்ணையின் பொது விபர குறிப்பு, பண்ணையின் வரைபடம், ஆண்டு பயிர்த் திட்டம், மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை விபரம், துறையுடனான ஒப்பந்தம், நில ஆவணம், நிரந்தர கணக்கு எண், ஆதார் அட்டை நகல் மற்றும் விண்ணப்பதாரரின் கடவுச் சீட்டு அளவு புகைப்படம் ஆகிய ஆவணங்களுடன் சான்று கட்டணத்தை செலுத்த வேண்டும். விவசாயம் மட்டுமின்றி கால்நடை வளர்ப்பு, தேனி வளர்ப்பு, வனப்பொருள் சேகரிப்பு செய்வோரும் வணிகம் மற்றும் ஏற்றுமதி செய்வோரும் பதிவு செய்யலாம்.

பதிவு கட்டணம், ஆய்வு சார்ந்த கட்டணம், பயண நேரம் கட்டணம் மற்றும் சான்று கட்டணமாக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.2700/-, பிற விவசாயிகள் ரூ.3200/-, விவசாயிகள் குழுப்பதிவிற்கு ரூ.7200/- மற்றும் வணிக நிறுவனங்களுக்கு ரூ.9400/- என நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உயிர்ம வேளாண்மையில் ஈடுபடும் தனிப்பட்ட விவசாயிகள் மற்றும் குழுக்கள் அமைத்து உரிய கட்டணம் செலுத்தி தேசிய உயிர்ம உற்பத்தி திட்டத்தின் கீழ் பதிவு செய்து சான்று பெற்று வருகின்றனர்.

மேலும் தற்பொழுது ஓரே வட்டாரத்தில் உள்ள ஒரே கிராமத்தில் அல்லது அருகாமையில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த உயிர்ம விவசாயம் செய்யும் விவசாயிகள் ஒரு குழுவாக அமைத்து எவ்வித கட்டணமும் இல்லாமல் பங்களிப்பு உறுதி அளிப்புத் திட்டத்தில் அங்ககச் சான்று பெறலாம். இவ்வாறு சான்று பெற்ற பொருட்களை உள்நாட்டு அளவில் மட்டும் விற்பனை செய்யலாம். குறைந்த பட்சம் 10 விவசாயிகள் முதல் 50 விவ சாயிகள் வரை இணைந்து குழுவாக அமைத்து உயிர்ம முறைப்படி விவசாயம் செய்வோம் என உறுதி மொழி எடுத்துக் கொண்டு புகைப்படம் ஒட்டிய விண்ணப்பத்துடன் பதிவு செய்ய வேண்டும். பங்களிப்பு உறுதி அளிப்புத் திட்டத்தில் பதிவு செய்யும் விவசாயிகள் தேசிய உயிர்ம உற்பத்தி திட்டத்தின்கீழ் உயிர்ம சான்று பெறுவதற்காக வழங்கப்பட்ட அதே ஆவணங் களை மண்டல குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இத்திட்டத்தில் உறுப்பினர்கள் குழுவில் உள்ள மற்ற விவசாயிகளின் வயலை ஆய்வு செய்ய வேண்டும். மூன்றாம் நபர் ஆய்வு இல்லை. இத்திட்டத்தில் கட்டணமின்றி எளிமையான முறையில் பதிவு செய்வதால் விவசாயிகளுக்கு பயனுள்ள தாகவும், அதிக அளவில் விவசாயிகள் உயிர்ம சான்று பெற முடியும்.

எனவே உயிர்ம வேளாண்மை செய்யும் விவசாயிகள் குழுவாக இணைந்து பங்களிப்பு உறுதி அளிப்புத் திட்டத்தில் கட்டணம் இல்லாமல் அல்லது மத்திய அரசின் தேசிய உயிர்ம வேளாண்மை செயல்திட்டத்தின்படி கட்டணம் செலுத்தியும் பதிவு செய்து அங்கக சான்று பெற்று பயன் பெறலாம்.

எனவே இயற்கை முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகள், இயற்கை வேளாண்மையில் உயிர்ம சான்று பெறும் நடை முறைகள் குறித்து உழவர் மையம், ஒழுங்கு முறை விற்பனைக் கூட வளாகம் (தலைமை அரசு மருத்துவமனை எதிரில்) இராம நாதபுரம். என்ற முகவரியில் செயல்பட்டு வரும் மாவட்ட விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பதிவு செய்து பயன் பெறுமாறு விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர், பொ.இரத்தினகுமார் கேட்டுக் கொண்டார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# தேங்காய் டானிக் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்த வேளாண் மாணவிகள்



சிவகங்கை, பிப்.14

சிவகங்கை மாவட்டம், செட்டிநாடு, வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவிகள் கிராம விவசாயிகளுக்காக தேங்காய் டானிக் பயன்பாடு குறித்து செய்முறை விளக்கம் நடத்தினர். இந்நிகழ்ச்சி வாணியம்பட்டி கிராமத்தில் நடைபெற்றது. இதில் பலர் கலந்து கொண்டு ஆர்வத்துடன் பயனடைந்தனர்.

மாணவிகள், தேங்காய் மரங்களில் அதிக மகசூல் பெறவும், காய்களின் தரத்தை மேம்படுத்தவும் தேங்காய் டானிக் முக்கிய பங்காற்றுகிறது என்று விளக்கினர். தேங்காய் டானிக் என்பது நுண்ணூட்டச்சத்துகள், வளர்ச்சி ஊக்கிகள் மற்றும் உயிர்ச்சத்துகள் கொண்ட திரவ உரமாகும். இது மரத்தின் வேர் வளர்ச்சியை அதிகரிக்கவும், பூத்தல் மற்றும் காய் கட்டுதல் சதவீதத்தை உயர்த்தவும் உதவுகிறது.

**தேங்காய் டானிக் பயன்பாடுகள் :** தேங்காய் மரங்களில் பூ உதிர்வு குறைவு, காய் கட்டுதல் மற்றும் காய் எண்ணிக்கை அதிகரிப்பு, மரத்தின் நோய் எதிர்ப்பு சக்தி உயர்வு, காய்களின் எடை மற்றும் தரம் மேம்பாடு, வறட்சியை தாங்கும் திறன் அதிகரிப்பு.

**பயன்படுத்தும் முறை :** விவசாயிகள் 6 மாதத்திற்கு ஒரு முறை மரத்தின் வயதிற்கு ஏற்ப 200 மில்லி முதல் 500 மில்லி வரை டானிக் பயன்படுத்தலாம். மரத்தின் வேர் பகுதிக்குச் சுற்றிலும் 10–15 செ.மீ ஆழத்தில் சிறிய குழி செய்து, அதில் டானிக்கை ஊற்றி பின்னர் மண்ணால் மூட வேண்டும். சிறந்த விளைவைப் பெற மழைக்கால தொடக்கத்தில் அல்லது பாசனத்திற்குப் பிறகு பயன் படுத்துவது நல்லது என மாணவரவிகள் தெரிவித்தனர். மேலும், இயற்கை முறையில் தயாரிக்கப்படும் இந்த டானிக், மண்ணின் ஆரோக்கியத்தை பாதுகாத்து நீண்டகால மகசூலை உறுதி செய்யும் எனவும் குறிப்பிட்டனர். விவசாயிகள் இத்தகவலை வரவேற்று, தங்கள் தோட்டங்களில் இதனைப் பயன்படுத்த உறுதியளித்தனர். இந்நிகழ்ச்சி விவசாயிகளுக்கும் மாணவிகளுக்கும் இடையே அறிவு பரிமாற்றத்தை ஏற்படுத்தியதுடன், நிலையான வேளாண்மை வளர்ச்சிக்கான ஒரு முக்கியமான படியாக அமைந்தது.

# அம்மாப்பட்டியில் பருத்தி காய்ப்புழு மேலாண்மை குறித்து வேளாண் மாணவி பயிற்சி



மதுரை, பிப்.14

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டாரம், அம்மாப்பட்டி கிராமத்தில் கிராமப்புற பணி அனுபவத் திட்டத்தின் கீழ் பருத்தி காய்ப்புழு மேலாண்மை குறித்த விழிப் புணர்வு மற்றும் செயல் முறை பயிற்சி நடைபெற்றது.

மதுரை வேளாண்மைக் கல்லூரி மாணவி ரா.லோஹிதா, இந்நிகழ்ச்சியை நடத்தி, பருத்தியில் அதிக சேதத்தை ஏற்படுத்தும் காய்ப்புழுவின் தாக்கம், அதன் வாழ்வு சுழற்சி மற்றும் ஆரம்ப நிலையிலேயே தாக்கத்தை கண்டறியும் வயல் ஆய்வு முறைகளை விளக்கினார்.

ஒரு தாவரத்திற்கு 1-2 புழுக்கள் அல்லது சுமார் 5 சதவீத காய்கள் சேதமடைந்தால் உடனடி கட்டுப்பாட்டு நடவடிக்கை அவசியம் என்பதை கூறினார். மேலும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளில் காலத்திற்கு ஏற்ற விதைப்பு, வயல் சுத்தம், பாதிக்கப்பட்ட காய்களை சேகரித்து அழித்தல், ஏக்கருக்கு 5 இனக்கவர்ச்சி பொறிகள் அமைத்தல், பறவைக் கூண்டுகள் பொருத்துதல், முட்டை அழிக்கும் உயிரியல் பகை பூச்சிகளை விடுதல் மற்றும் வேப்பச்சாறு 5 சதவீதம் தெளித்தல் போன்ற சுற்றுச்சூழல் நட்பு முறைகள் குறித்து எடுத்துரைத்தார்.

தவிர்க்க முடியாத சூழலில் மட்டுமே பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை சரியான அளவில் மாற்றி மாற்றி பயன்படுத்த வேண்டும் என்றும், பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் தங்களது சந்தேகங்களுக்கு தெளிவு பெற்று, அறிவியல் அடிப்படை யிலான மேலாண்மை முறை களைப் பின்பற்றுவதன் மூலம் உற்பத்தி செலவை குறைத்து மகசூலும் தரமும் உயர்த்த முடியும் என்பதை உணர்ந்தனர்.

# மண்ணுக்கு உயிர் ஊட்டும் மீன் அமிலம் வேளாண் கல்லூரி மாணவர்கள் செயல்விளக்கம்

கடலூர், பிப்.14

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் புலத்தைச் சேர்ந்த IV ஆண்டு இளங்கலை வேளாண்மை பயிலும் JK Batch மாணவர்கள், ELAGR 401 - Agricultural Waste Management மற்றும் ELAGR 402 - Organic Production Technology (Experiential Learning - அனுபவ வழிக் கற்றல்) பாடங்களின் ஒரு பகுதியாக, மீன் அமிலம் (Fish Amino Acid) தயாரித்து, அதன் பயன்கள் மற்றும் பயன்பாட்டு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளித்தனர்.

இந்நிகழ்ச்சி கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி தாலுகாவிற்கு உட்பட்ட சம்பாரெட்டிபாளையம் கிராமத்தில் நடைபெற்றது. உழவியல் துறை தலைவர் பேராசிரியர் முனைவர் A.சுந்தரி, உதவி பேராசிரியர்கள் முனைவர் K.சுசீந்திரன் மற்றும் முனைவர் R.கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் வழிகாட்டுதலின்படி மாணவர்கள் இந்த செயல்விளக்கத்தை மேற்கொண்டனர். மேலும், சம்பாரெட்டிபாளையம் கிராமத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழக இறுதி ஆண்டு வேளாண் புல மாணவர்கள் ஊரக மேலாண் பணி அனுபவ RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் கீழ் தங்கி பயின்று வருகின்றனர்.

வேளாண் விரிவாக்கத் துறை தலைவர் பேராசிரியர் முனைவர் G.தமிழ்ச்செல்வி மற்றும் பேராசிரியர் முனைவர் J.மீனாம்பிகை ஆகியோரின் தலைமையில் 11 மாணவர்கள் கொண்ட B3 குழுவினருடன், அனுபவ வழிக் கற்றல் மாணவர்களும் இணைந்து மீன் அமிலத்தின் தயாரிப்பு முறை, பயன்கள், பயன்பாட்டு அளவு மற்றும் தெளிப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவான விளக்கத்தை வழங்கினர்.

இந்நிகழ்வில், சம்பாரெட்டிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் ராமானுஜதாஸ் மற்றும் மதன் ஆகியோர் அண்ணாமலைப் பல்கலைக்கழக உழவியல் துறையில் அனுபவ வழி கற்றல் பயிலும் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட 50 லிட்டர் மீன் அமிலத்தை தங்களது 35-வது நாள் நேரடி நடவு செய்யப்பட்ட நெல் வயலில் தெளித்தனர். இந்த செயல்விளக்கம் மூலம் இயற்கை வேளாண்மை முறைகள் குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன், நிலத்தின் வளம் மற்றும் பயிர்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் இயற்கை ஊட்டச்சத்து பயன்பாடு குறித்தும் கலந்துரையாடினர்.

இந்த செயல்விளக்கத்தில் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் பயிலும் மாணவர்களாகிய பத்ரிநாராயணன் S, பாலாஜி S, பாலாஜி V, சந்திரகாந்த் G மற்றும் பரத் R ஆகியோரும் இந்நிகழ்வில் இணைந்து செயல்பட்டனர்.

தகவல் : **நிதிஷ் குமார் க, 4ம் ஆண்டு இளங்கலை வேளாண்மை, வேளாண் புலம், அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.**





# நீரா பானம் - வேளாண் மாணவர்களுக்கு விளக்கம்

ஈரோடு, பிப்.14



ஈரோடு மாவட்டம், பொங்கலூர் வட்டாரத்திற்கு உட்பட்ட ராமம் பாளையம் கிராமத்தில் உள்ள விவசாயி சுப்பிரமணியனின் தென்னைத் தோட்டத்தை, கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் இறுதி ஆண்டு வேளாண்மை மாணவர்கள் நேரில் பார்வையிட்டனர். இந்த கள ஆய் போது, தென்னை மரங்களில் இருந்து இயற்கை பானமான 'நீரா' எடுக்கும் முறைகள் குறித்து மாணவர்களுக்கு செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. சுப்பிரமணியம், தென்னம் பாளையை முறையாகத் தயார் செய்து, நவீன தொழில்நுட்ப முறையில் நீரா சேகரிப்பது, அதன் தரம், சுகாதாரம் மற்றும் குளிர் சாதனப் பாதுகாப்பு குறித்து விரிவாக விளக்கினார். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பருகக்கூடிய ஊட்டச்சத்து மிகுந்த இயற்கை பானமாக நீரா இருப்பதையும், இது விவசாயிகளுக்கு கூடுதல் வருமான வாய்ப்பை வழங்கும் ஒரு மதிப்பு சேர்க்கப்பட்ட தயாரிப்பாக இருப்பதையும் அவர் எடுத்துக்காட்டினார்.

இந்த கள ஆய்வு மாணவர்களுக்கு தென்னை சார்ந்த மதிப்பு சேர்க்கை தொழில்கள், பாரம்பரிய அறிவு மற்றும் நவீன சந்தை வாய்ப்புகள் குறித்து புரிதலை ஏற்படுத்தியதாக மாணவர்கள் தெரிவித்தனர். இதுபோன்ற முயற்சிகள், உள்ளூர் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதோடு, இயற்கை பானங்களை ஊக்குவிக்கும் ஒரு முக்கிய முன்னெடுப்பாக அமைந்துள்ளது.

## பழ ஈ தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து வேளாண் மாணவர்கள் செயல் விளக்கம்

நாமக்கல், பிப்.14

நாமக்கல் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் பிஜிபி வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள், தங்களது கிராமப்புற அனுபவ பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக அகரம் கிராம விவசாயி களை தொடர்ந்து சந்தித்து வருகிறார்கள். பயிர் மேலாண்மையில் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தகுந்த தீர்வுகளை

வழங்கும் நோக்கில் இம்மாணவர்கள் நேரடி களப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



அந்த வகையில், இன்றைய தினம் விவசாயி கோபாலின் தோட்டத்தைப் பார்வையிட்ட மாணவர்கள், கொடி வகைப் பயிர்களில் அதிக சேதத்தை ஏற்படுத்தும் பழ ஈ தாக்குதலை ஆய்வு செய்தனர். பழ ஈக்கள் காய்களில் முட்டையிட்டு, அதன் மூலம் உள்ளே புழுக்கள் உருவாகி காய்கள் கெடாடு போவதால் மகசூல் மற்றும் வருமானத்தில் கணிசமான இழப்பு ஏற்படுகிறது என்பதை மாணவர்கள் விளக்கினர்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வாக நச்சு உணவு/பொறி (Fruit Fly Trap) அமைக்கும் முறையை செயல்விளக்கத்துடன் எடுத்துரைத்தனர். மெத்தில் யூஜினால் மற்றும் மாலத்தியான் ஆகியவற்றை 1:1 என்ற சம அளவில் கலந்து, ஒவ்வொரு பாலித்தீன் பைகளிலும் 10 மில்லி அளவில் நிரப்பி நச்சுப்பொறியாக தயாரிக்க வேண்டும் என அறிவுறுத்தினர்.

தயாரிக்கப்பட்ட பொறிகளை ஒரு ஹெக்டேருக்கு 25 எண்ணிக்கையில் தோட்டம் முழுவதும் சமவிகிதத்தில் தொங்கவிட வேண்டும். நிலத்திலிருந்து சுமார் 1.5–2 மீட்டர் உயரத்தில், மரங்களின் நிழற்பகுதியில் அமைத்தால் ஆண் பழ ஈக்களை அதிகமாக ஈர்த்து கட்டுப்படுத்த முடியும் என்றும், 15–20 நாட்களுக்கு ஒரு முறை திரவத்தை மாற்றி புதுப்பிக்க வேண்டும் என்றும் மாணவர்கள் தெரிவித்தனர்.

இம்முறையைப் பின்பற்றுவதன் மூலம் அதிகளவு ரசாயனத் தெளிப்பைத் தவிர்த்து, குறைந்த செலவில் பயிர்களை பாதுகாக்க முடியும். மாணவர்களின் இத்தகைய தொழில்நுட்ப வழிகாட்டுதல் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்று, அறிவியல் சார்ந்த விவசாய நடைமுறைகளைப் பரப்புவதில் முக்கிய பங்காற்றி வருகிறது.




Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# தென்னை சாகுபடியில் இளம் குரும்பை உதிர்வதைத் தடுக்க எருக்கு தழைப்போர்வை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



கரூர், பிப்.14

கரூர் மாவட்டம், வெண்ணமலை வட்டாரத்தில், நாமக்கல் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் தங்களது இறுதி ஆண்டு பாடத் திட்டமான கிராமத்தில் தங்கி வேளாண் பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் தென்னை சாகு படியில் இளம் குரும்பை உதிர்வதைத் தடுக்க எருக்கு தழைப் போர்வை குறித்து எடுத் துரைத்தனர். தென்னை மரங்களில் போரான் சத்து குறை பாட்டினால் ஏற்படும் இளம் குரும்பை உதிர் வதைத் தடுக்க 'எருக்கு தழைப்போர்வை' (Mulching) பெரிதும் உதவுகிறது. எருக்கு இலை களைத் தென்னையைச் சுற்றி இடுவதன் மூலம் மண்ணிற்குத் தேவையான நுண்ஊட்டச் சத்துக்கள் கிடைப்பதுடன், இது ஒரு சிறந்த பூச்சி விரட்டியாகவும் செயல்படுகிறது.

மேலும், தென்னை மரத்திற்குத் தேவையான பல்வேறு ஊட்டச் சத்துக்களை இது இயற்கையான முறையில் வழங்குகிறது.

**முக்கியப் பயன்கள்**

**குரும்பை உதிர்வு தடுப்பு :** போரான் குறைபாட்டை நீக்கி, காய்கள் முதிர்வதற்கு முன்பே விழுவதைக் குறைக்கிறது.

**பூச்சி விரட்டி :** இதிலுள்ள பால் போன்ற திரவம் மற்றும் வாசனை இயற்கை பூச்சி விரட்டியாகச் செயல்பட்டு மரத்தைத் தாக்குதலில் இருந்து பாதுகாக்கிறது.

**ஊட்டச்சத்து மேலாண்மை :** மட்கும் போது மண்ணிற்குத் தேவையான தழைச்சத்து மற்றும் பிற சத்துக்களை வழங்குகிறது.



# காற்றுப் பதியம் – ராசம்பாளையம் கிராமத்தில் வேளாண் மாணவியர்களின் செய்முறை விளக்கம்



நாமக்கல், பிப்.14

நாமக்கல் மாவட்டம், ராசம்பாளையம் கிராமத்தில், பிஜிபி வேளாண்மை கல்லூரி மாணவியர்கள் சார்பில் கொய்யா பயிரில் காற்றுப் பதியம் (Air Layering) குறித்த செய்முறை விளக்கம் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சி, விவசாயிகளுக்கு தரமான நாற்றுகளை குறுகிய காலத்தில் உருவாக்கும் நவீன பெருக்கல் முறைகளை அறிமுகப்படுத்தும் நோக்குடன் நடைபெற்றது.

இந்த செய்முறையில், ஆரோக்கியமான பென்சில் தடிமனுள்ள கிளையைத் தேர்வு செய்து, அதன் பட்டையை 2-3 செ.மீ அகலத்தில் வளையமாக அகற்றினர். பின்னர், வேர் வளர்ச்சி ஊக்கியாக IBA (Indole Butyric Acid) அல்லது NAA பயன்படுத்தி, ஈரமான கோகோபீட் மூலம் மூடி, பாலிதீன் தாள் மற்றும் நூல் கொண்டு உறுதியாக கட்டப்பட்டது. தேவையான அளவு ஈரப்பதம் பராமரிக்கப்பட்டது.

இந்த முறையின் மூலம் குறுகிய காலத்தில் நல்ல வேர் வளர்ச்சி கிடைத்து, தாய் செடியின் பண்புகளைப் பாதுகாக்கும் தரமான நாற்றுகள் உருவாகும் என்பதை மாணவியர்கள் விளக்கினர். நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகள் இந்த தொழில்நுட்பத்தை ஆர்வத்துடன் கற்றுக் கொண்டு, தங்களது தோட்டங்களில் பயன் படுத்துவதற்கான சந்தேகங்களுக்கு விளக்கம் பெற்றனர். இந்த செய்முறை விளக்கம், கிராமப்புறங்களில் பழவகை பயிர்களின் உற்பத்தியை உயர்த்துவதோடு, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் உதவும் என அனைவராலும் பாராட்டப்பட்டது.

# நெற்பயிரில் அசோஸ்பைரில்லம் நாற்று நனைப்பு குறித்து செய்முறை விளக்கம்



தேனி, பிப்.14

நெற்பயிரில் அசோஸ்பைரில்லம் நாற்று நனைப்பு குறித்த செய்முறை குறித்து கல்லூரி மாணவி விவசாயி களுக்கு விளக்கம் அளித்தார்.

தேனி மாவட்டம், கோகிலாபுரம் பகுதியில், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவி இனியா.ம இப்பகுதி விவசாயிகளுக்கு நெல் வயல்களில் அசோஸ் பைரில்லம் நாற்று நனைப்பு செய்வதன் மூலம் மண்ணின் வளத்தை மேம்படுத்துவது மற்றும் ரசாயன உரங்களின் பயன் பாட்டை குறைப்பது குறித்து செய்முறை விளக்கம் அளித்தார்.

அசோஸ்பைரில்லம் நாற்று நனைப்பதற்கான முறைகள், அதற்கு தேவையான கலவை அளவுகள், நாற்றுகளை நனைக்கும் நேரம், நடவு செய்யும் முறைகள், பராமரிப்பு நடைமுறைகள் மற்றும் அசோஸ்பைரில்லம் பயன்பாட்டின் மூலம் நெற்பயிரின் வளர்ச்சி மற்றும் மகசூல் அதிகரிக்கும் விதம் குறித்து அவர் விரிவாக எடுத்துரைத்தார். மேலும், அசோஸ்பைரில்லம் ஒரு இயற்கை நைட்ரஜன் வழங்கும் உயிர் உரமாக செயல்பட்டு, வேர்களின் வளர்ச்சியையும் மண் உயிரியல் செயல்பாடுகளையும் மேம்படுத்து கிறது என்பதை விளக்கினார்.

## விவசாய விழிப்புணர்வை ஏற்படுத்தி கலந்துரையாடிய வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.14

பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஒன்றியத்தில் கிராமப்புற விவசாய அனுபவ பணித்திட்டம் (RAWE) மாணவிகள், கபிலர்மலை வட்டாரத்தைச் சேர்ந்த குழுவினர் அரசு பள்ளியைப் பார்வையிட்டு, மாணவர் களுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் ஈடுபட்டனர்.

**நடத்திய செயல்பாடுகள் :** தேசிய பருப்பு தினத்தை (10.02.26) முன்னிட்டு பருப்புகளின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு வழங்கப்பட்டது. விதை உருண்டை (Seed Ball) தயாரிக்கும் முறையை விளக்கி, மாணவர் களையும் நேரடியாக விதை உருண்டை தயாரிப்பில் ஈடுபடுத்தினர். தேசிய பருப்பு தின உறுதிமொழி (Pledge) மாணவர்களிடம் எடுத்துக்கொள்ளப்பட்டது. வேளாண்மை குறித்த பொது விழிப் புணர்வு ஏற்படுத்தப்பட்டது. வேளாண்மையில் பருப்புப் பயிர்களின் அவசியம் மற்றும் பயன்கள் குறித்து முக்கியத்துவம் அளித்து விளக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியின் மூலம் மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வேளாண்மை விழிப்புணர்வு மற்றும் பருப்பு பயிர்களின் சமூகப் பங்களிப்பு குறித்து அறிவும் ஆர்வமும் வளர்க்கப்பட்டது.

# விவசாயிகளுக்கு உதவும் ஆன்லைன் சேவை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.14

நாமக்கல் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் தங்களது இறுதி ஆண்டு பாடத்திட்டமான கிராமத்தில் தங்கி வேளாண் பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் பிள்ளூர் கிராமத்தில் TNAU AgriCart விவசாயிகளுக்கு உதவும் ஆன்லைன் சேவை. TNAU AgriCart என்பது Tamil Nadu Agricultural University (TNAU) வழங்கும் ஒரு ஆன்லைன் அனுப்பும் & விற்பனை சேவை ஆகும். இது மூலம் விவசாயிகள் தரமான விதைகள், இடுபொருட்கள், பண்ணைக்கருவிகள், உயிரி உரங்கள் மற்றும் வேளாண் பொருட்களை நேரடியாக வீட்டு வாசல் வரை வாங்கலாம் என்று TNAU அறிமுகம் செய்துள்ளது.

TNAU AgriCart செயலி Google Play-இல் வெளியிடப் பட்டுள்ளது. இதில் விவசாயிகளுக்கு பயன்படும் பயன்பாட்டு இடுபொருட்கள், விதைகள் மற்றும் பிற முன்னேற்றப் பொருட்களை பார்க்க மற்றும் ஆர்டர் செய்ய முடியும்.

Google play

TNAU–வின் இணையதளமான tnauagricart.com மூலம் விவசாயிகள் விரும்பியவற்றை தேர்ந்தெடுத்துச் நேரடியாக வாங்க முடியும். இதில் நெல், பயறு, பயிர் பாதுகாப்பு பொருட்கள் போன்ற பல பொருட்கள் உள்ளன.

tnauagricart.com

TNAU AgriCart சேவை விவசாயிகளிடையே நல்ல வரவேற்பு பெற்றுள்ளதாகவும், நேரடி வழங்கலால் விவசாயிகளுக்கு நேரமும் செலவையும் குறைக்க உதவுகிறது என்றும் தகவல்கள் உள்ளன.